மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதுவும் அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. எல்லாக் கட்சிக்காரர்களும் பேச வேண்டும் என்று விரும்புகிறார்கள். அப்படிப் பேசுவதில் ஆட்சேபணையில்லை. யார் யார் பேச இருக்கிறார்கள் என்பதை கொறடா மூலம் எழுதி அனுப்புங்கள்.

4. உரிமைப் பிரச்சினை.

(அ) 'பத்திரிகையில் வெளிநடப்பு குறிப்பிடாதது.

திரு. செ. சிவசாமி : ஒரு முக்கியமான மசோதாவை அறிமுகம் செய்கிறபோது அத்தனை எதிர்க்கட்சிகளும் அதை எதிர்த்து வெளிநடப்பு செய்தன. அது பத்திரிகைகளில் எல்லாம் வந்துள்ளது. ஆனால், அரசாங்கத் தரப்பில் அரசாங்கச் செய்தி என்று வரக்கூடிய பத்திரிகையில் வெளிநடப்பு சம்பந்தமாக எந்தவிதமான குறிப்பும் கிடையாது. இது ஒரு உரிமைப் பிரச்னையாகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எழுதிக் கொடுங்கள், பின்னர் பார்க்கலாம்.

(ஆ) போலீஸ் ஸ்பெஷல் பிராஞ்ச் எஸ். பி. அனுப்பிய சுற்றறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 246-ஆவது விதியின்கீழ் திரு. ரா. உமாநாத் அவர்களும், திரு. என். எஸ். வி. சித்தன் அவர்களும் அவை உரிமை மீறல் குறித்து பிரச்னை குறித்து அறிக்கை கொடுத்து, அதுகுறித்து பேச அனுமதி கேட்டிருக்கிறார்கள். அதற்கு நான் அனுமதி அளிக்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : அவைத் தலைவர் அவர்களே, இதை அவை முழுவதும், அவை அங்கத்தினர்கள் எல்லோரும், நீங்கள் உட்பட சம்பந்தப்பட்ட ஒரு பிரதான பிரச்னையாக, சீரியஸ் பிரச்னையாக எடுத்துக்கொள்ள வேண்டும்.......

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த உரிமைப் பிரச்னை பற்றி விளக்கங்கள் அரசு தரப்பிலே திரட்டப்படுகின்றது. தகவல்கள் வந்த பிறகுதான் இதற்கேற்ற பதில்களை, விளக்கங்களைத் தர முடியும். நாளையோ அல்லது அடுத்த நாளோ வைத்துக்கொண்டால், அதற்கேற்ற விளக்கங்களைத் தரமுடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு).